# அம்மோனியா வாயு கசிவு குறித்து மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் ஆய்வு: அனுமதிக்கப்பட்ட அளவைவிட 51% அதிக மாசு கண்டுபிடிப்பு



**சென்னை:** எண்ணூரில் அம்மோனியா வாயுக்கசிவு ஏற்பட்ட பகுதிகளில் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் நடத்திய ஆய்வில் அங்கு அனுமதிக்கப்பட்ட அளவை விட காற்றில் 51 சதவீதம் அதிகமாக அம்மோனியா கலந்திருப்பது தெரியவந்துள்ளது. சென்னை, எண்ணூர் கோரமண்டல் இன்டர்நேஷனல் தொழிற்சாலையில் உரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மூலப்பொருளான அம்மோனியா திரவம் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள 12 ஆயிரத்து 500 டன் கொள் திறன் கொண்ட சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு வருகிறது.

தேவைப்படும் அம்மோனியா திரவம் அவ்வப்போது வெளிநாடுகளிலிருந்து கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு, எண்ணூரில் உள்ள சிறு துறைமுகத்திலிருந்து குழாய்கள் மூலமாகத் திரவ வடிவில் மைனஸ் 33 டிகிரி செல்சியஸ் குளிர் நிலையில் இத்தொழிற்சாலை சேமிப்பு தொட்டியில் சேகரிக்கப்பட்டு, உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலையில் நேற்று முன்தினம் (டிச.26) நள்ளிரவு 11.45 மணியளவில் குழாயில் கசிவு ஏற்பட்டு அம்மோனியா வாயு வெளியேறி அருகில் உள்ள பகுதி மக்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டன. உடனடியாக அப்பகுதியில் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

அது தொடர்பாகமாசுக்கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: வாயுக் கசிவை கண்டறிந்தவுடன், தகுந்த நிபுணர்கள் உடனே வரவழைக்கப்பட்டு, 20 நிமிடங்களில் அந்தத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயுக் கசிவு முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. இந்த வாயுக் கசிவால், பெரியகுப்பம், சின்னக்குப்பம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளைச் சேர்ந்த சுமார் 60 பேர் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு மருத்துவ பராமரிப்பு மற்றும் சுகாதார ஆலோசனைகளை வழங்குவதற்காக 2 நுரையீரல் நிபுணர்களைக் கொண்டு 5 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

தற்போது குழாயில் அம்மோனியா கசிவு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர் செயலர், சென்னை ஐஐடியை சேர்ந்த நிபுணர்கள், மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள், தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (NEERI), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI) மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தொழில்நுட்பக் குழு ஒன்று உடனடியாக அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தனது உடனடி மதிப்பீட்டு அறிக்கையை 24 மணி நேரத்துக்குள் அரசுக்கு சமர்ப்பிக்குமாறும், தனது விரிவான அறிக்கையை 3 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், வாயு கசிவு ஏற்பட்ட குழாய்களை முற்றிலும் சரிசெய்து,உரிய பரிசோதனை மேற்கொண்டபிறகே, அம்மோனியா கப்பலிலிருந்து இறக்கப்பட வேண்டும் எனத் தொழிற்சாலை நிர்வாகத்துக்குத் அரசு உத்தரவிட்டுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. காற்றில் 0.57 பிபிஎம் அம்மோனியா வாயு கலந்திருப்பது அனுமதிக்கப்பட்ட அளவாகும். ஆனால் வாயு கசிவின்போது, தொழிற்சாலை நுழைவு வாயிலில் 28 பிபிஎம் அம்மோனியா வாயு இருந்துள்ளது. இது அனுமதிக்கப்பட்ட அளவை விட 51 சதவீதம் அதிகம் என மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக வெளியான செய்தியின் அடிப்படையில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வு தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துள்ளார். இந்த வழக்கை வரும் ஜன.2-ம் தேதி விசாரணைக்குப் பட்டியலிடும்படி, தீர்ப்பாய பதிவுத் துறைக்கு உத்தரவிட்டுள்ளார். அன்றைய தினம் அம்மோனியா வாயுக் கசிவுதொடர்பாக அறிக்கை தாக்கல் செய்யுமாறு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்துக்கு உத்தரவிட்டுள்ளது.


## காஷ்மீரில் முஸ்லிம் லீக் சட்டவிரோத அமைப்பு: மத்திய அரசு அறிவிப்பு



**புதுடெல்லி:** மத்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

முஸ்லிம் லீக் ஜம்மு காஷ்மீர் அமைப்பின் மசரத் அலாம் பிரிவு மற்றும் அதன் உறுப்பினர்கள் ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத செயல்களுக்கு ஆதரவு தெரிவித்து தேச விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். மேலும், ஜம்மு காஷ்மீரில் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என மக்களை தூண்டுகின்றனர். நாட்டின் ஒற்றுமை, இறையாண்மைக்கு எதிராக யாராவது செயல்பட்டால், அவர்கள் யாரும் தப்ப முடியாது, சட்டப்படி தண்டிக்கப்படுவர் என பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு தெளிவுபட கூறியுள்ளது. இவ்வாறு அமித் ஷா கூறியுள்ளார்.

## ஜேஎன்.1 வகை கோவிட் தொற்றும், ‘ஏமாற்றும்’ தன்மையும் - மருத்துவ நிபுணர்கள் சொல்வது என்ன?



**நியூயார்க் / புதுடெல்லி:** அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் (US CDC) சமீபத்திய தரவுகளின்படி, கரோனா வைரஸின் ஓமிக்ரான் என்னும் வேரியன்ட்டின் புதிய துணை வேரியன்ட் ஜேஎன்.1 (JN.1) கரோனா வைரஸ் தற்போது அமெரிக்காவில் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 44.2% பேருக்குக் காரணமாக அமைந்துள்ளது என்பது தெரிய வந்துள்ளது. இந்தியாவில் இந்த புதிய ஜேஎன்1 வைரஸ் பாதிப்பினால் 63 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, கர்நாடக மாநிலத்தில் மூவர் உயிரிழந்ததும் கவலைகளையும் அச்சங்களையும் அதிகரித்துள்ளது.

பொதுவாகவே குளிர்கால வானிலை, மக்களை காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத்திணறல் என்று முடக்கிப் போட்டுவிடும் நிலையில், பிற வைரஸ்கள் பரவுவதால் கோவிட் 19-ஐ ஏற்படுத்தும் கரோனா வைரஸான SARS-CoV-2, தொடர்ந்து உருமாற்றம் அடைந்து பரவி வருகிறது. இந்நிலையில், கரோனா வைரஸின் சமீபத்திய திரிபு வடிவமான ஜேஎன்.1 என்ற வைரஸ் மிகவும் அதிகம் பரவக் கூடியது என்று யேல் பல்கலைக்கழக மருத்துவ அறிக்கையும், அமெரிக்க நோய்க்கட்டுப்பாட்டு அமைப்பும் தெரிவிக்கின்றன. குளிர் காலங்களில் ஜேஎன்.1

கரோனா வேரியன்ட் பரவும் அபாயம் இருப்பதாக அமெரிக்க நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், யேல் பல்கலைக்கழக தொற்றுநோய் மருத்துவ நிபுணர் ஹெய்டி சபாட்டா கூறும்போது, "இந்த புதிய வேரியன்ட் பற்றி இன்னும் எங்களுக்கு மேலதிக விவரங்கள் கிடைக்கவில்லை" என்றார். இதோடு பிற துணை உருமாற்ற வைரஸ்களும் சுழற்சியில் உள்ளன. டிசம்பரில் அமெரிக்காவில் ஹெச்வி.1 என்ற வைரஸ் பரவி வந்தது. நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 29% பேரை சோதித்தபோது இந்த வைரஸ் இருந்தது தெரியவந்தது. ஈஜி.5 என்ற இன்னொரு வேரியன்ட் உள்ளது. இது முதலிடத்தில் இருந்தது. இப்போது அது ஜேஎன்.1 வைரஸினால் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதுவரை ஜேஎன்.1 கடுமையான நோய்த்தொற்றை ஏற்படுத்துவதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. ஆகவே, பொதுச் சுகாதாரத்துக்கு பேராபத்து இருப்பதாகத் தெரியவில்லை என்று அமெரிக்க நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்தாலும், எச்சரிக்கையுடன் இந்த வைரஸை அமெரிக்கா தொடர்ந்து கண்காணித்து வருகின்றது.

யேல் பல்கலை. மருத்துவ நிபுணர் சபட்டா கூறும்போது, "சுவாச ஒத்திசைவு வைரஸ் [respiratory syncytial virus-RSV] மற்றும் காய்ச்சல் வைரஸ் இன்னமும் சுழற்சியில் உள்ளது என்பது மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விஷயம் என்று நான் கூறுவேன். எந்த ஒரு புதிய உருமாற்றமடையும் வைரஸும், SARS-CoV-2 வைரஸ் இன்னும் உருவாகி வருகிறது என்பதற்கான அறிகுறியாகும். ஆகவே, கரோனா இன்னமும் நம்முடன்தான் உள்ளது என்ற உண்மையை நாம் புறக்கணிக்க முடியாது" என்று எச்சரித்துள்ளார்.

**ஜேஎன்.1 எங்கிருந்து வந்தது? -** கடந்த செப்டம்பரில் அமெரிக்காவில் ஜேஎன்.1 வைரஸ் இருப்பது தெரியவந்தது. பைரோலா என்று அழைக்கப்படும் BA.2.86 என்ற வைரஸுடன் ஜேஎன்.1 வைரஸ் நெருங்கிய உறவு கொண்டது. ஓமிக்ரான் வைரஸின் வம்சாவளியில் இந்த வைரஸ் வருகிறது. இந்த ஓமிக்ரான் தான் 2021-ல் அமெரிக்காவையே உலுக்கியது. இது பல வடிவங்கள் எடுத்துவிட்டது. இப்போது

இந்த அசல் வடிவம் சுழற்சியில் இல்லை. BA.2.86 வேரியன்டுக்கும் ஜேஎன்.1 வேரியண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்னவெனில் ஜேஎன்.1 வைரஸ் அதன் ஸ்பைக் புரதத்தில் இன்னுமொரு உருமாற்றத்தைக் கொண்டுள்ளது. இந்த மாற்றம் வைரஸின் மையமான தன்மைகளை மாற்றாது. ஆனால், முதற்கட்ட ஆய்வுகள் தெரிவிப்பதுதான் கவலையளிக்கும் ஓர் அம்சம், 'இது உடலின் நோய்த் தடுப்பு, நோய் எதிர்ப்புச் சக்திகளையும் கூடுதலாக ஏமாற்றி தொற்றக் கூடியது' என்பதே.

ஜேஎன்.1 வைரஸ் குறித்து எதையும் திட்டவட்டமாகச் சொல்வதற்கு இப்போதைக்கு போதுமான ஆதாரம் இல்லை என்றாலும், இது கடுமையான நோய் அல்லது முந்தைய வேரியன்ட்களுடன் தொடர்புடைய அறிகுறிகளை விட அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று இப்போதைக்கு கூற முடியவில்லை என்கிறது அமெரிக்க நோய்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம். ஆகவே, இதற்கான அறிகுறிகள் என்பது பொதுவான கரோனா அறிகுறிகளையே கொண்டிருக்கும். தீவிரத்தன்மை அந்தந்த தனிநபரின் நோய் எதிர்ப்பாற்றலைப் பொறுத்து வேறுபடும். ஆனால், இது மற்ற கரோனா வேரியன்ட்களை விட நம் உடல் எதிர்ப்பாற்றலை சாமர்த்தியமாக ஏமாற்றித் தொற்றக்கூடியது என்பதே.

SARS-CoV-2, இன்ஃப்ளுயன்ஸா மற்றும் RSV ஆகிய 3 வைரஸ்களும் குளிர்காலத்தில் வரவே செய்யும். இதனை அமெரிக்க மருத்துவ உலகம் 'டிரிபிள்டெமிக்' (tripledemic) என்று அழைக்கின்றது. இப்போது இந்த வைரஸ்களுக்கு எதிரான கோவிட் வாக்சின்கள் புழக்கத்தில் உள்ளதால் பயப்பட வேண்டியதில்லை என்கின்றனர்.

ஆகவே சளி, காய்ச்சல், தொண்டைக் கட்டு, குளிர், மூக்குசளி கொட்டுதல், தலைவலி, மூட்டு மற்றும் தசை வலி, மூச்சுவிடுதலில் சிரமம், ருசி மற்றும் வாசனை சக்தியை இழத்தல், வயிற்று உபாதை, லேசான வயிற்றுப்போக்கு, வாந்தி போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படும் போது மருத்துவரை ஆலோசித்துக் கவனமாக இருக்க வேண்டும்

## கூடங்குளம் அணுமின் நிலையத்தில் கூடுதல் அணு உலைகள் அமைக்க இந்தியா, ரஷ்யா ஒப்பந்தம்



**புதுடெல்லி:** ரஷ்ய தொழில்நுட்ப உதவியுடன் தமிழகத்தின் கூடங்குளத்தில் அணுமின் நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 2016-ம் ஆண்டு முதல் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதல் அணு உலையில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இந்த அணுமின் நிலையம் 2027 முதல் தனது முழு திறனுடன் செயல்படவுள்ளது. இந்நிலையில் இந்தியா-ரஷ்யா இடையே நடைபெறும் ஆண்டு கூட்டத்தில் பங்கேற்க 5 நாள் பயணமாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ரஷ்யா சென்றுள்ளார். அவர் ரஷ்ய தலைவர்களுடன் பேசி வருகிறார். ரஷ்யாவில் உள்ள இந்தியர்கள் மத்தியில் உரையாற்றிய ஜெய்சங்கர் கூறியதாவது:

கூடங்குளம் அணுமின் நிலைய திட்டத்தில் எதிர்காலத்துக்கு தேவையான அணு உலைகள் அமைப்பது தொடர்பான ஒப்பந்தத்தில் நாங்கள் கையெழுத்திட்டுள்ளோம். பொருளாதாரத்தில் ஒத்துழைப்புடன் செயல்படுவது தொடர்பாக துணை பிரதமர் டெனிஸ் மான்ட் ரோவுடன் விரிவான மற்றும் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இரு நாடுகள் இடையே வர்த்தகம், நிதி, போக்குவரத்து, எரிசக்தி, விமான போக்குவரத்து மற்றும் அணுசக்தி துறையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய வாய்ப்புகளை ஆராய்வதில், ரஷ்யா அதிக கவனம் செலுத்துவது

பாராட்டத்தக்கது. பல துறைகளில் நிலையான ஒத்துழைப்புடன் செயல்படுவது குறித்து நாங்கள் ஆலோசித்தோம்.

அணுசக்தி, மருத்துவம், மருந்து பொருட்கள் மற்றும் மருத்துவ கருவிகள் துறைகளில் பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இந்தியா- யூரோசியன் பொருளாதார மண்டலம் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்து ஜனவரி மாத இறுதியில் இரு நாட்டு குழுக்களும் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக் கொண்டுள்ளோம். இவ்வாறு ஜெய்சங்கர் கூறினார்.

ரஷ்யா வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கே லாவ்ரோவையும் ஜெய்சங்கர் சந்தித்து இருதரப்பு மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

## AI சூழ் உலகு 15 | ‘ஏஐ தொழில்நுட்பம் கண்டு அஞ்சாதீர்...’ - பில் கேட்ஸ் அடுக்கும் காரணங்கள்

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த பார்வை ஒருவருக்கு ஒருவர் மாறுபடும். கல்லூரி பயிலும் மாணவர்கள், ஐடி துறையில் பணியாற்றும் நபர்கள் அதனை தங்களது போட்டியாளர்களாக பார்க்கலாம். அதுவே டெக் வல்லுநர்கள், மனித வாழ்வினை மேலும் ஸ்மார்ட் ஆக்கும் கருவியாக அதனைப் பார்க்கலாம். இத்தகையச் சூழலில் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் இணை நிறுவனர் பில் கேட்ஸ், ஏஐ தொழில்நுட்பத்தை எப்படி பார்க்கிறார் என்பதை பார்க்கலாம்.

ஏனெனில், 20-ம் நூற்றாண்டில் கணினி சார்ந்த டிஜிட்டல் புரட்சிக்கு வித்திட்டவர்களில் பில் கேட்ஸும் ஒருவர். உலகம் முழுவதும் பரவலாக அறியப்படுகின்ற நபர். முக்கியமாக அவரது நிறுவனத்தின் விண்டோஸ் தான் உலக மக்களின் பார்வையை விரிவு செய்ய உதவி வருகிறது. 2022-ல் ஜெனரேட்டிவ் ஏஐ குறித்த விதையை தூவிய நிறுவனங்களில் மைக்ரோசாஃப்ட்டின் பணி கவனிக்கத்தக்கது. இப்படியாக பல காரணங்களை சொல்லலாம். இந்நிலையில், ஏஐ குறித்து தனது வலைப்பதிவில் அவர் பகிர்ந்துள்ள தகவல்கள் மிகவும் விரிவானது. இனி பில் கேட்ஸ் தொடர்கிறார்.

**செயற்கை நுண்ணறிவின் காலம்:** ‘எனது வாழ்நாளில் தொழில்நுட்பம் சார்ந்து ஏராளமான டெமோக்களை பார்த்துள்ளேன். அதில் இரண்டு எனக்குள் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தின. அந்த இரண்டும் தொழில்நுட்ப உலகில் புதிய புரட்சியை ஏற்படுத்தியவை. விண்டோஸ் உட்பட அனைத்து நவீன ஆப்ரேட்டிங் சிஸ்டங்களுக்கும் முன்னோடியாக திகழும் கிராபிகல் யூஸர் இன்டர்ஃபேஸ் அதில் ஒன்று. அதன் அறிமுகத்தை 1980-களில் நான் பெற்றேன். சார்லஸ் சியோனி எனும் புரோகிராமர் அப்போது அதன் டெமோவை எனக்கு நிகழ்த்தி காட்டி இருந்தார். அதன் ஊடாக கணினியை கொண்டு என்னென்ன செய்ய முடியும் என்பதை அறிந்து ஆச்சரியம் அடைந்தேன். அதுவே அப்போது எங்கள் நிறுவனத்தின் அடுத்த 15 ஆண்டுகளுக்கான திட்டத்தை வகுக்க காரணமாகவும் அமைந்தது.

அதற்கடுத்து, டெக் உலகில் நான் எதிர்கொண்ட இரண்டாவது சர்ப்ரைஸ் 2022-ல் நடந்தது. 2016-ம் ஆண்டு முதல் முதலாக ‘ஓபன் ஏஐ’ நிறுவனத்தின் அணியினரை நான் சந்தித்து இருந்தேன். தொடர்ந்து அடுத்தடுத்த சந்திப்புகளில் அவர்களது பணியைக் கண்டு வியப்படைந்தேன். அதோடு அவர்களுக்கு ஒரு சோதனையும் வைத்தேன். Advanced Placement Biology தேர்வில் ஏஐ பாட் பதில் அளித்து, தேர்வில் தேர்ச்சி பெற செய்ய வேண்டும் என்பது நான் கொடுத்த டாஸ்க். இதைச் செய்ய அவர்களுக்கு எப்படியும் சில ஆண்டுகள் எடுக்கும் என கணித்தேன். ஆனால், அவர்கள் அடுத்த சில மாதங்களில் என்னை அணுகினார்கள். மல்டிபிள் சாய்ஸ் முறையிலான தேர்வில் 60-க்கு 59 மார்க் பெற்றது ‘ஜிபிடி’. மேலும், சில கேள்விகளுக்கு விரிவாக பதிலும் அளித்தது. அதன்பிறகு விஞ்ஞானத்துக்கு துளியும் தொடர்பு இல்லாத கேள்விகளை முன்வைத்தோம். அந்த அறையில் இருந்தவர்கள் அதற்கு என்ன பதில் சொல்லி இருப்பார்களோ அதையே ஜிபிடி-யும் சொல்லி இருந்தது. அது ஜெனரேட்டிவ் ஏஐ வகையறாவின் அட்வான்ஸ்டு டெமோ. அது எங்களை ஆச்சரியமடைய செய்தது.

பர்சனல் கம்ப்யூட்டர், இன்டர்நெட், மொபைல் போன் முதலியவை எந்த அடிப்படையில் வடிவமைக்கப்பட்டதோ அதே நோக்கத்தின் கீழ் தான் ஏஐ-யும் தொழில்நுட்ப உலகில் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் துணையோடு வேலை, கற்றல் முறை, பயணம், தகவல் தொடர்பியல் போன்றவற்றில் பெரிய மாற்றம்

நிகழ உள்ளது. முக்கியமாக, உலக அளவில் பல்வேறு தரப்பில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஏஐ களையும் என கருதுகிறேன். அது எப்படி இருக்கும் என சில நேரங்களில் யோசித்தும் பார்க்கிறேன். நிச்சயம் ஏஐ அந்த ட்ரெண்டை உருவாக்கும். கல்வி தொடங்கி காலநிலை மாற்றம் வரை ஏஐ உதவும்.

எந்தவொரு தொழில்நுட்பமும் மக்களிடையே பொது வெளியில் அறிமுகமாகும்போது பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும். அதன் தொடக்க நாட்களில் மக்களை அச்சுறுத்தவே செய்யும். ஏஐ-யும் அதற்கு விதிவிலக்கு அல்ல. பணிப் பாதுகாப்பு, சட்ட நெறிமுறை, பிரைவசி மற்றும் பல என ஏஐ பல்வேறு விஷயங்களில் மக்களை அச்சுறுத்தி உள்ளது. சமயங்களில் தவறான தகவலை கூட ஏஐ பதிலாக தரலாம்.

**தொழில்நுட்ப துறையின் நெடுநாள் கனவு:** ஏஐ மற்றும் ஏஜிஐ வடிவமைப்பு என்பது கணினி சார்ந்த தொழில்நுட்ப துறைக்கு நெடுநாள் கனவு என சொல்லலாம். அது எப்படி என்றால், மனிதர்களை விடவும் எந்திரங்கள் எப்போது ஸ்மார்ட் ஆகும் என்ற கேள்வி இங்கே சில தசாப்தங்களாக வினவப்பட்டு வருகிறது. மெஷின் லேர்னிங் மற்றும் அதி திறன் வாய்ந்த கணினி சக்தியின் மூலமாக இது சாத்தியமாகி உள்ளது. அதற்கான வேலை வேகமாக நடந்து வருகிறது. வெகு சில நாட்களில் கணினி உலகம் இரண்டாக அடையாளம் காணப்படும். அது ஏஐ-க்கு முந்தைய காலம் மற்றும் பிந்தைய காலம் என அறியப்படும்.

**கணினி பயன்பாட்டில் மாற்றம்:** எப்படியும் வரும் நாட்களில் நமது கணினி பயன்பாடும் மாற்றம் காணும். அதற்கான வேலையை ஏஐ செய்யும். இப்போது கணினியில் டாஸ்குகளை மேற்கொள்ள சில கட்டளைகள் உள்ளிட வேண்டி உள்ளது. டெக்ஸ்ட் சார்ந்த டிராஃப்ட் பணிக்கு மைக்ரோசாஃப்ட் வோர்ட் அல்லது கூகுள் டாக்ஸ் போன்றவற்றை பயனர்கள் பயன்படுத்தலாம். ஆனால், எந்திரத்தால் தானாகவே ஒரு மின்னஞ்சலை அனுப்பவோ, செல்ஃபியை பகிரவோ, ஒரு டேட்டாவை ஆராயவோ, சினிமா டிக்கெட் புக் செய்யவோ அல்லது மீட்டிங் ஷெட்யூல் செய்யவோ முடியாது. இந்தப் பணிகளை செய்ய மற்றொருவரின் உதவி தேவைப்படுகிறது.

அடுத்து வரும் ஆண்டுகளில் இதில் பெரிய அளவில் மாற்றம் இருக்கும். வெவ்வேறு பணிகளை செய்ய பல்வேறு அப்ளிகேஷன்களை பயன்படுத்த வேண்டிய தேவை இருக்காது. அதை எளிய மொழியில் உங்கள் டிவைஸ்களிடம் சொன்னால் போதும். அந்த வேலைகளை செவ்வனே செய்து முடிக்கும். குறிப்பாக, ஆன்லைனில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு பர்சனல் அஸிஸ்டன்ட் எனும் யதார்த்த விஷயம் ஏஐ மூலம் சாத்தியமாகி உள்ளது. 30 ஆண்டுகளுக்கு முன்னர் நான் எழுதிய ‘The Road Ahead’ புத்தகத்தில் இது குறித்து சொல்லி இருந்தேன். இதில் பிரைவசி சார்ந்த சிக்கல்களும் இருக்கத்தான் செய்கிறது.

**ஏஐ மூலம் ஏற்படும் ரிஸ்க் மேனெஜிபிள் தான்:** ஏஐ ஏற்படுத்தி உள்ள அச்சுறுத்தல் மக்களிடையே அதிகரித்து காணப்படுகிறது. உலகில் மோட்டார் கார் அறிமுகமான போது விபத்து குறித்த அச்சுறுத்தலும் எழுந்தது. அதற்காக கார்களை தடை செய்யவில்லை. மாறாக, வேக கட்டுப்பாடு, சாலை விதிமுறை, பாதுகாப்பு வழிகள் போன்றவற்றை ஏற்படுத்தினோம். அதுபோல மெஷின் காரணமாக மனிதர்களுக்கு வேலை இழப்பு அபாயம், தேர்தல் முடிவுகளில் தாக்கம், பூவுலகில் மனிதர்களே வேண்டாம் என ஏஐ திறன் பெற்ற கருவிகள் நினைத்தால் என்னவாகும் என பலவிதமாக கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

இதெல்லாம் நியாயமான கேள்விதான். ஆனால், இதனை மனித குலம் திறம்பட கையாளும் திறனை பெற்றுள்ளது. இதற்கு முன்பும் மோட்டார் கார் போல பல விஷயங்களை நாம் எதிர்கொண்டு உள்ளோம். அதை திறம்பட கையாண்டும் உள்ளோம்.

ஏஐ தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரையில் நாம் அதன் ஆரம்பக்கட்டத்தில் உள்ளோம். இது மோட்டார் கார்களுக்கு ஏற்படுத்தியது போன்ற விதிகளை ஏற்படுத்துவதற்கு முந்தைய காலம். அதி விரைவாக ஏஐ மாற்றம் கண்டு வருகிறது. அடுத்து என்ன நடக்கும் என தெரியவில்லை. இப்போதைக்கு சமூகத்தில் அதை தனிநபர்கள் கையாளும் விதம் காரணமாக, அது சார்ந்து கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது. நிச்சயம் இதற்கு தீர்வு காணப்படும்.

மருத்துவம், கல்வி, காலநிலை என பல துறைகளில் ஏஐ நமக்கு உதவ உள்ளது. ஏஐ சார்ந்த ஆதாயம் குறித்து நான் நிறைய சொல்வேன். ஆனால், இது அதற்கான நேரம் அல்ல. டீப்ஃபேக், தனிநபர் தாக்குதல், பாதுகாப்பு அச்சுறுத்தல் என ஏஐ சார்ந்த அச்சுறுத்து தற்போது நிலவி வருகிறது. இதனை முறையான தொழில்நுட்ப சட்ட விதிமுறை மூலமாக அரசு நெறி செய்யலாம். இதில் உலக நாடுகள் இணைந்து செயல்படுவது அவசியம். தனியார் துறைக்கும் இதில் பங்கு உள்ளது. அது பிரைவசி, தனிநபர் பாதுகாப்பு, பொறுப்பு போன்றவற்றை உள்ளடக்கியது. இறுதியாக மீண்டும் இதை சொல்லிக் கொள்கிறேன் ஏஐ மூலம் ஏற்படும் ரிஸ்க் மேனெஜிபிள்தான்’ என்று அழுத்தமாகவும் நம்பிக்கையுடன் சொல்கிறார் பில் கேட்ஸ்.

EVA STALIN IAS ACA